காலபைரவருக்கு சிறப்பு பூஜை

சங்ககிரியில் சிறப்பு அலங்காரத்தில் காலபைரவர்.
(வலது) தம்மம்பட்டியில் மலர் அலங்காரத்தில் காலபைரவர்.

சங்ககிரி, செப். 4: சங்ககிரியில் உள்ள அருள்மிகு சௌந்தரநாயகி உடனமர் சோமேஸ்வரர் கோயில் வளாகத்தில் உள்ள காலபைரவருக்கு தேய்பிறை அஷ்டமியையொட்டி வெள்ளிக்கிழமை சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

இதில், காலபைரவருக்கு பல்வேறு திவ்ய பொருள்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடைபெற்றன.

இதேபோல, பூத்தாலக்குட்டை, பூத்தாழிஸ்வரர் கோயில் வளாகத்தில் உள்ள காலபைவரருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், பூஜைகள் நடைபெற்றன. இதில், அதிக அளவிலான பக்தர்கள் பங்கேற்று காலபைரவரை வழிபட்டனர்.

தம்மம்பட்டியில்...

தம்மம்பட்டி காசி ஸ்ரீ விசாலாட்சி உடனுறை காசி ஸ்ரீ விஸ்வநாதர் கோயிலில் சிறப்பு யாகம் நடத்தி காலபைரவருக்கு பால், தயிர், சந்தனம், குங்குமம் உள்ளிட்ட பல்வேறு பொருள்களால் அபிஷேகம், அலங்காரம் செய்து பூஜைகள் நடைபெற்றன. இதில், சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமானோர் பங்கேற்றனர்.

இலவச காது பரிசோதனை முகாம்

முதியோருக்கு காதுகேட்கும் கருவியை பொருத்திய மருத்துவமனை இயக்குநர் பிரணவ். உடன், நிர்வாகி தீபா சுதாகர்.

சேலம், செப். 4: சேலம் சுதாகர் இ.என்.டி. கேர் மையம் சார்பில் சிறப்பு காது பரிசோதனை முகாம் வெள்ளிக்கிழமை தொடங்கியது.

ஞாயிற்றுக்கிழமை வரை 3 நாள்கள் நடைபெறும் இந்த இலவச முகாமில், முதல் நாளான வெள்ளிக்கிழமை சுமார் 120-க்கும் மேற்பட்டோர் பரிசோதனை செய்து பயனடைந்தனர்.

இந்த மையத்தில் காதுகேட்டும் திறனை துல்லியமாக அளந்து இரைச்சல், வலி, காற்றின் மூலம் உண்டாகும் சப்தங்களை தவிர்த்து, சரியான அளவில் காது கருவிகளை பொருத்தி பார்க்கும் வசதி தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு முறையில் காதுகேட்கும் கருவிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், முதியோர் வீட்டுக்கே சென்று பரிசோதனை செய்தல், பழைய காது கருவிகளை கொடுத்து புதிய கருவிகளாக மாற்றிக் கொள்ளுதல் மற்றும் சிறப்பு சலுகையில் கருவிகள் வழங்கப்படுகின்றன.

தீ விபத்தில் 32 இருசக்கர வாகனங்கள் எரிந்து சேதம்

அரூர், செப். 4: தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே தீ விபத்தில் 32 இருசக்கர வாகனங்கள் எரிந்து வெள்ளிக்கிழமை சேதமடைந்தன.

பாப்பிரெட்டிப்பட்டி அருகேயுள்ள வெங்கடசமுத்திரம் பகுதியைச் சேர்ந்தவர் இமாம்பாஷா (45). இவர் பைக் மெக்கானிக். அப்பகுதியில் தனியாருக்குச் சொந்தமான இடத்தில் பைக் பழுது நீக்கும் கடை நடத்தி வருகிறார். இங்கு 30-க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் பழுது பார்ப்பதற்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், மர்ம நபர்கள் தீ வைத்ததில் இருசக்கர வாகனங்கள் பழுது நீக்கும் கடை தீப்பற்றியதில் 32 இருசக்கர வாகனங்கள் எரிந்து சேதமடைந்தன.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த பாப்பிரெட்டிப்பட்டி தீயணைப்பு நிலைய அலுவலர் செந்தில்குமார் தலைமையிலான வீரர்கள் தீயை அணைத்தனர். விபத்து குறித்து பாப்பிரெட்டிப்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சூரமங்கலம் மண்டலத்தில் வளர்ச்சிப் பணிகள்

ஆணையர் ஆய்வு

சேலம் ஜெய் நகரில் கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணிகளை ஆய்வுசெய்த ஆணையர் லலித் ஆதித்ய நீலம்.

சேலம், செப். 4: சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ஆணையர் லலித் ஆதித்ய நீலம் வெள்ளிக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண் 26-இல் வன்னியர் நகர், குப்தா நகர், ஜெயா நகர், வி.எம்.ஆர் நகர் ஆகிய தெருக்களில் திடக்கழிவு வாகனம் மூலம் தூய்மைப் பணியாளர்கள் பொதுமக்களிடம் இருந்து 4 வகையான குப்பைகளை தரம்பிரித்து சேகரிப்பதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, ஜெய் நகரில் மினி பொக்லைன் இயந்திரம் மூலம் கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டதுடன், கழிவுநீர் தடையின்றி கால்வாய்களில் செல்லும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என துப்புரவு ஆய்வாளருக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், பள்ளப்பட்டி பிரதான சாலையில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் சாலை சுத்தம் செய்யும் இயந்திரம் மூலம் சுத்தம் செய்யும் பணிகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மாநகர நல அலுவலர் மரு.செ. ராம்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

குழந்தைகளை கடத்துபவர்களுக்கு 15 நாள்களில் தண்டனை வழங்க வேண்டும்

முன்னாள் ஐ.ஜி. பொன்.மாணிக்கவேல்

சேலம், செப். 4: குழந்தைகளை கடத்துபவர்களுக்கு 15 நாள்களில் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் ஐ.ஜி. பொன்.மாணிக்கவேல் கூறினார்.

சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்த அவர் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியது:

மனித குலத்தின் ஆணிவேரையே அழிக்கும் வகையில் குழந்தைத் திருட்டு தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. திருடப்படும் பெரும்பாலான பெண் குழந்தைகள் பிச்சை எடுக்க பயன்படுத்தப்படுகின்றனர். மேலும், பாலியல் தொழிலிலும் ஈடுபடுத்தப்படும் அவல நிலை காணப்படுகிறது.

12 முதல் 15 வயதுவரை உள்ள குழந்தைகள் போதைப் பொருள்களுக்கு அடிமையாக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான குழந்தைகள் மருத்துவமனைகள், திருவிழாக்களில் கடத்தப்படுகின்றன. தமிழகத்தில் கடந்த 2017-ஆம் ஆண்டு முதல் 2025-ஆம் ஆண்டு வரை மாயமான குழந்தைகளில் சுமார் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளை இதுவரை கண்டுபிடிக்கவில்லை.

முதல்வர்களுக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு தேவையில்லை. அதற்கு பதிலாக மருத்துவமனை மற்றும் மகப்பேறு வார்டுகளுக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும். அவ்வாறு கொடுக்கும்போது குழந்தை கடத்தலை தடுக்க முடியும்.

குழந்தை கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு 15 நாள்களில் தண்டனை வழங்க வேண்டும். தமிழகத்தில் ஆண் மற்றும் பெண் குழந்தைகள் என நாள்தோறும் சராசரியாக 12 குழந்தைகள் கடத்தப்படுகின்றன. இதைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

ஏற்காட்டில் சாலையில் மரம் விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு

சாலையில் விழுந்த மரத்தால் பாதிக்கப்பட்ட போக்குவரத்து.

ஏற்காடு, செப். 4: ஏற்காட்டில் படகு இல்லம் அருகில் சாலையில் மரம் விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம், ஏற்காட்டுக்கு கிருஷ்ண ஜெயந்தி விடுமுறையை முன்னிட்டு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வெள்ளிக்கிழமை வந்தனர்.

இந்நிலையில், படகு இல்லம் அருகில் உள்ள அரசுப் பள்ளி சாலையோரத்தில் மரம் சாலையில் விழுந்ததால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தகவல் அறிந்து வந்த தீயணைப்புத் துறையினர் சாலையில் விழுந்த மரத்தை அப்புறப்படுத்தினர்.

இதனால், இச்சாலை வழியாக தாவரவியல் பூங்கா, ரோஜா தோட்டம் செல்லும் சுற்றுலாப் பயணிகள் காத்திருந்து சென்றனர்.

கள்ளச்சந்தையில் மது விற்ற பெண் கைது

மேட்டூர், செப். 4: கள்ளச்சந்தையில் கூடுதல் விலைக்கு மது விற்ற பெண்ணை போலீஸார் கைது செய்தனர்.

காவேரி கிராஸ் அருகே உள்ள குண்டுகல்லூரில் பெண் ஒருவர் தனது வீட்டில் மது பாட்டில்களை பதுக்கி வைத்து, கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வந்த விடியோ வலைதளங்களில் பரவியது.

இதையடுத்து, மேட்டூர் காவல் ஆய்வாளர் கண்ணன் தலைமையில் போலீஸார் குண்டுக்கல்லூரில் வெள்ளிக்கிழமை சோதனையிட்டனர். அதில், வெங்கடாஜலம் மனைவி ஈஸ்வரி (47) வீட்டில் பதுக்கி வைத்திருந்த ஏராளமான மது பாட்டில்களை போலீஸார் கைப்பற்றி அவரை கைது செய்தனர்.

இவர்மீது அரசு மதுபானத்தை சட்ட விரோதமாக விற்பனை செய்ததாக ஏற்கெனவே 6 வழக்குகள் உள்ள நிலையில், மீண்டும் அதே குற்றத்தில் ஈடுபட்டதால் போலீஸார் வழக்குப் பதிவுசெய்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காவல்படுத்தினர்.

கண்ணன், ராதை வேடமணிந்த குழந்தைகள்...

சங்ககிரி, வி.என்.பாளையத்தில் உள்ள சக்தி மாரியம்மன் கோயிலில் நடைபெற்ற கிருஷ்ண ஜெயந்தி விழாவில் கண்ணன், ராதை வேடம் அணிந்து பங்கேற்ற வி.என்.பாளையம் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகள்.

தொப்பூர் – மேச்சேரி இடையே உள்ள சுங்கச்சாவடியை அகற்ற வேண்டும்

பாமக கூட்டத்தில் தீர்மானம்

மேட்டூர், செப். 4: தொப்பூர் - மேச்சேரி இடையே அமைக்கப்பட்டுள்ள சுங்கச்சாவடியை அகற்ற வேண்டும் என சேலம் மேற்கு மாவட்ட பாமக பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலம் மேற்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டம் மாவட்ட பாமக அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரும், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளருமான சதாசிவம் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

மேட்டூர் அனல் மின் நிலையத்தால் ஏற்படும் மாசை கட்டுப்படுத்த வேண்டும். அனல் மின் நிலையத்தில் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு நேரடியாக அனல் மின்நிலைய நிர்வாகமே ஊதியமும், பணி பாதுகாப்பும் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொடர்ந்து, கட்சியின் தற்போதைய செயல்பாடுகள், எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இதில், பாமக மாநில துணைத் தலைவர்கள் துரைராஜ், ராமகிருஷ்ணன், இளைஞரணி மாநில செயலாளர் ராஜசேகரன், மாநில மகளிர் அணி செயலாளர் சோபனா, மாநில இளம்பெண்கள் அணி செயலாளர் நீலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சேலம் சென்ட்ரல் சட்டக் கல்லூரியில் மாதிரி நீதிமன்ற பசுமை வழக்குவாத போட்டி

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்கிய சிறப்பு விருந்தினர்கள் பி.பாலசுப்பிரமணியம், ரா.அழகுமணி. உடன், கல்லூரி தலைவர் சரவணன் தனபாலன்.

சேலம், செப். 4: சேலம் சென்ட்ரல் சட்டக் கல்லூரியில் உயர்நிலைப் பள்ளி அளவிலான சுற்றுச்சூழல் சட்டம் சார்ந்த மாதிரி நீதிமன்ற பசுமை வழக்குவாத போட்டி வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், புலிகள் சரணாலயம் மற்றும் காடுகள் ஆக்கிரமிப்பு, மனித விலங்குகள் மோதல் சார்ந்த தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டியில், தமிழகம் முழுவதும் இருந்து வந்த பள்ளிகளின் அணிகள் திறம்பட வாதிட்டு தங்களின் திறமையை வெளிப்படுத்தின. இதற்கான பரிசளிப்பு விழா கல்லூரியில் கல்லூரியின் தலைவர் சரவணன் தனபாலன் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக ஈரோடு வழக்குரைஞர்கள் சங்கத் தலைவரும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் முன்னாள் உறுப்பினருமான பி.பாலசுப்பிரமணியம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மூத்த வழக்குரைஞர் ரா.அழகுமணி ஆகியோர் பங்கேற்று பரிசளித்து வாழ்த்தினர். முன்னதாக, உதவிப் பேராசிரியர் கா.புஷ்பவனம் வரவேற்றார். உதவிப் பேராசிரியர் க.சத்தியபிரியா நன்றி கூறினார்.

சோனா கல்லூரியில் கிருஷ்ண ஜென்மாஷ்டமி விழா

சேலம், செப். 4: சேலம் இஸ்கான் அமைப்பு சார்பில், சோனா கல்லூரியில் கிருஷ்ண ஜென்மாஷ்டமி விழா வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கமான இஸ்கான் சார்பில் நடைபெற்ற விழாவில், காலை 8 மணிக்கு ஆரத்தி யக்ஞும், கிருஷ்ணன் கதை ஜராசந்தன் முக்தி மற்றும் சிசுபாலன் வதம் நாடகம், ஹரே கிருஷ்ண படம், பஜனை உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த கிருஷ்ணர் – பலராமர்.

தொடர்ந்து, மாலை 5 மணிமுதல் வீணை கச்சேரி, பாட்டுக் கச்சேரி, சேலம் இஸ்கான் கோயில் திருப்பணி பற்றிய தொகுப்பு, கிருஷ்ணன் கதை, மகா அபிஷேகம், மகா ஆரத்தி மற்றும் கீர்த்தனமும், குழந்தைகளுக்கான கிருஷ்ணன் வேடப் போட்டியும் நடைபெற்றது. இதில், சிறப்பு விருந்தினர்களாக ஸோஹோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு மற்றும் நடிகை கௌதமி பங்கேற்றனர்.

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில், பாங்க் பாலகத்தரம் ரோடு, அமினாசி ரோடு அருகில், ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்தின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.2,26,86,033/- (31.08.2026 தேதி அன்று) தொகையை திருமதி. வெங்கடலட்சுமி சங்கரநாராயணன் மற்றும் திரு. பெருமாள் S வரதராஜ், என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, ஆக்கபூர்வ கவாதீனம் (Constructive Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 09.10.2026 தேதியில் (காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை) விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.4,15,10,000/- மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.41,51,000/-.

அசையாச் சொத்து விபரம்

சேலம்-636 006, தாதகாபட்டி கிராமம், சர்வே எண்.95/5, வார்டு Y, பிளாக்-9, டவுன் சர்வே எண்.72, இதிலமைந்த 3,900 சதுரடி நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்ட 7,530 சதுரடி கட்டிடப் பரப்பிலான கதவு எண்.1/12 கட்டிடத்துடன் கூடிய குடியிருப்புச் சொத்து.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் 'லிங்க்'கில் பார்வையிடலாம்.

தேதி : 31.08.2026
இடம் : கோயம்புத்தூர்

ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி லிட்

SMFG Grihashakti

SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்
கார்பொரேட் அலுவலகம்: 503 ம் 504, 5வது தளம், G-பிளாக், இன்ஸ்யம் BKC, BKC மெயின் ரோடு, பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (E), மும்பை- 400051.
பதிவு அலுவலகம்: காமர்ஸோன் IT பார்க், டவர் B, முதல் தளம், எண் 111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை - 600116, தமிழ்நாடு.

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு.

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 9(1) வரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான 15 நாள் E-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பதுயாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள இந்நிறுவனத்திடம் (Secured Creditor) அடமானம் / ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கே விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துகள், SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் (இனி "SMHFC" எனக் குறிப்பிடப்படும்) (Secured Creditor) அதிகாரபூர்வ அலுவலர் அவர்களால் சுவாதீனத்தில் (Possession) எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தச் சொத்துகள், பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களிடமிருந்து SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்-க்குச் ("SMHFC") சேர வேண்டிய பின்வரும் கடன் பாக்கி மற்றும் அத்தொகை வசூலிக்கப்படும் தேதி வரையான வட்டி மற்றும் இதர செலவுகள் சேர்த்து வசூலிப்பதற்காக கீழ்க்காணும் தேதி, நேரத்தில் "உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு எனும் அடிப்படையில்" விற்கப்பட உள்ளன.

வ. எண்.	கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர்/ LAN	சொத்து விவரம்	ரிசர்வ் விலை, EMD தொகை	E-ஏலத் தேதி & நேரம்	EMD செலுத்த கடைசி தேதி
1.	LAN: 603439211616829 & 603439511707918 1. மைக்கேல் ஆரோக்கியராஜ் A 2. அனிதா ஷார்லட் மேரி M	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், ஆவண எண்: 4549/2022-ன் படி; சர்வே எண்கள்: S.No-28/5c, 28/5d வருவாய் ஆவணங்களின்படி S.No-28/5c, 28/5d; மொத்தப் பரப்பு: 0.07 + 0.03 = 0.10 ஏக்கர். அமைவிடம்: இடத்தின் பெயர்,கிராமம், நகரம், பதிவு, துணைப்பதிவு முதலியன. காவேரிப்பட்டி கிராமம்; சங்ககிரி வட்டம்; சேலம் மேற்கு பதிவு மாவட்டம், எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகம் -I. எல்லைகள்: 0.07 ஏக்கர் நிலத்திற்கு: பொதுப் பாதை மற்றும் ஊராட்சி கிணறு அட்டவணைக்கு வடக்கு; பழனிசாமி நிலத்திற்கு தெற்கு; பழனிசாமி நிலத்திற்கு கிழக்கு; ஊராட்சி கிணறு அட்டவணை மற்றும் S.No-28/5d நிலத்திற்கு மேற்கு. II) 0.03 ஏக்கர் நிலத்திற்கு எல்லைகள்: பொதுப் பாதைக்கு வடக்கு; - மைக்கேல் ஆரோக்கியராஜ் வாங்கிய நிலத்திற்கு தெற்கு; S.No-28/5c நிலத்திற்கு கிழக்கு; மைக்கேல் ஆரோக்கியராஜ் வாங்கிய நிலத்திற்கு மேற்கு. அனைத்து ஈஸ்மென்ட் உரிமைகள் மற்றும் பாதையுடன் கூடியது.	ரூ. 15,00,000/- ரூ.1,50,000/-	23.09.2026 காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை	22.09.2026

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன; மேலும், ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள இந்நிறுவனத்தின் இணையதளங்களில் (https://BidDeal.in and https://www.grihashakti.com/pdf/E-Auction.pdf) விவரங்கள் உள்ளன. ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவோரைத் தொடர்பு கொள்ளலாம்: திரு.மதுசூதனன் G, அலைபேசி: 9940444937, மின்னஞ்சல்: Madhusudanan.G@grihashakti.com; திரு.நிலோய் டே, அலைபேசி: 8655619157, மின்னஞ்சல்: Niloy.Dey@grihashakti.com

ஒம்/-
அதிகாரபூர்வ அலுவலர்
SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்

இடம்: சேலம், தமிழ்நாடு
தேதி: 03.09.2026

துப்பாக்கி, தோட்டாவுடன் தந்தை, மகன் கைது

மேட்டூர், செப். 4: மேட்டூர் அருகே வீட்டில் பதுக்கி வைத்திருந்த துப்பாக்கி, தோட்டாக்களை பறிமுதல் செய்த போலீஸார் தந்தை, மகனை கைது செய்தனர்.

மேட்டூர் அருகே உள்ள ஜலகண்டபுரத்தைச் சேர்ந்தவர் ஆனந்தன் (59), தேங்காய் வியாபாரி. இவரது மகன் சின்ன ஆனந்தன் (33), தனியார் நிறுவனத்தில் பாதுகாவலராக பணிபுரிந்து வருகிறார். இவர்கள் இருவரும் வேட்டையாடுவதில் ஆர்வம் உள்ளவர்களாம்.

இந்நிலையில், ஈரோடு, திருவண்ணாமலை பகுதிகளில் வன விலங்குகளை வேட்டையாடுவதாக மேட்டூர் வனச் சரகர் செங்கோட்டையனுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, ஆனந்தன் வீட்டில் வனத் துறையினர் வெள்ளிக்கிழமை தீவிர சோதனை நடத்தினர். அதில், நாட்டுத் துப்பாக்கி, ஏராளமான தோட்டாக்கள் மற்றும் வேட்டைக்கு பயன்படுத்தும் ஆயுதங்களை வனத் துறையினர் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து, இருவர் மீதும் வனப் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவுசெய்த வனத் துறையினர் மேட்டூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காவல்படுத்தினர்.

முட்டை விலை ரூ. 5.20 ஆக நீடிப்பு

நாமக்கல், செப். 4: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை ரூ. 5.20 ஆக நீடிக்கிறது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முட்டை விலையில் மாற்றம் செய்வது தொடர்பாக கோழிப் பண்ணையாளர்களிடம் கருத்து கேட்கப்பட்டது.

மற்ற மண்டலங்களில் விலையில் மாற்றம் இல்லாததால் இங்கும் மாற்றம் வேண்டாம் என தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலையை ரூ. 5.20 ஆக நிர்ணயித்து தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு அறிவித்தது. பல்லடத்தில் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கறிக்கோழி கிலோ ரூ. 95 ஆகவும், முட்டைக் கோழி கிலோ ரூ. 120 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.